1977 ஜூலை 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்கள் வசூலை நிறுத்தி வைத்து, குறுகியக் காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ், திரு. மா. மணிமாறன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு உணவு–கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, "கடந்த ஆண்டில் பஞ்ச நிலை நீடித்து சரியான நீர்ப்பாசனம் இல்லாததால் விளைச்சல் இன்றி விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை திருப்பி செலுத்த இயலாத நிலையில் அவர்கள் வாங்கிய கடன்களை வசூலிப்பதை நிறுத்தியும், குறுகிய கால கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றியும் உதவ வேண்டிய அவசியம் பற்றி" மாண்புமிகு உணவு–கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வறட்சி, வெள்ளம் போன்ற கடுமையான கால நிலைகளால் பயிர்கள் பாதிக்கப்படும்போது விவசாயிகளுக்கு உதவும் வகையில், அவர்கள் பெற்றுள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அடுத்த ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளில் தவணைகளில் திருப்பிச் செலுத்த அனுமதித்து கிராம விவசாய கூட்டுறவு வங்கிகள் உதவுகின்றன. வருவாய்த்துறை அதிகாரிகள் நிலத்திலிருந்து வருவாய் 6 அணா அல்லது அதற்குக் குறைவாக இருப்பதாக சான்றிதழ் வழங்கினால், மேற்கண்டவாறு கடன் மாற்றம் செய்யப்படுகிறது. மேலும், அடுத்த ஆண்டிலும் பயிர்ச் சேதம் ஏற்பட்டால் நஷ்டமடைந்த நபர்களுக்கு முன்பு மாற்றம் செய்யப்பட்ட கடன்கள் மேலும் மறுமாற்றம் செய்யப்படுகின்றன. குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றுவதற்குச் தேவையான மத்தியக் காலக் கடன் வசதியை இந்திய ரிசர்வ் வங்கி அளிக்கிறது. 1968-69 ஆம் ஆண்டு முதல் 1975-76ஆம் ஆண்டு வரை, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், 66 கோடியே 3 இலட்சம் ரூபாய் ‡ அளவுக்கு குறுகிய காலக்

‡ 455-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

கடன்கள் மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்பட்டன. 1976-77ஆம் ஆண்டில் 31 கோடியே 22 இலட்ச ரூபாய் அளவுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்தியக் காலக் கடன்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. நிலத்திலிருந்து வருவாய் 6 அணா அல்லது 37 காசு அதற்குக் குறைவு எனச் சான்றிதழ் வழங்கப்படும் இடங்களில், நடப்பு ஆண்டிலும் மேலே குறிப்பிட்ட வசதி தொடர்ந்து அளிக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாமன்றத் தலைவரவர்களே, இது தொடர்பாகச் சான்றிதழ் அளிக்கப்படும் நேரத்தில் சில பகுதி களில் ஒருவேளை அணுவாரி சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்கலாம், அதே நேரத்தில் இன்னொரு பகுதியில் அளிக்கப்படாததன் கார ணமாக உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தி லே சொன்னபொழுது காலம் தவறி விட்டது என்று சொன்னார் கள். காலத்தோடு அணுவாரி சான்றிதழை கணக்குப்பிள்ளை தந்த பிறகு உரிய காலத்தில் வழங்கப்படாத ஊர்களும் இருக்கின்றன. இந்த நேரத்தில் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும் புகிறேன். சிலயிடங்களிலே குறுவையில் கட்ட முடியாத நேரத் தில் இழப்பு ஏற்பட்ட நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கியிருப்பார்கள். அவர்களிடம் இந்த நேரத்தில் முழுத் தொகைக்கும் ஜப்தி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறுகிய காலத்தில் கட்ட முடியாதவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுவதற்கான வசதியை உருவாக்கித் தருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, தனிப்பட்ட முறையில், ஏதாவது தனிப்பட்ட நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினு டைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், பரிசீலிப் போம்.

1977-78-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1977-78-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்.

*திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, நிதி யமைச்சர் மாண்புமிகு நாஞ்சிலார் சமர்ப்பித்த பட்ஜெட், நலனற்றுக் கிடந்த கிராமங்களுக்குப் புது வாழ்வு தரும் பட்ஜெட்டாக அமைந்திருக்கின்றது என்பதனால் இதை நான் பாராட்டுகிறேன். மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன இராம இராஜ்யமும், தென்னாட் காந்திடு அவர்கள் அறிவித்த